3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly. transmitting a copy of the Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 16 of 1974), as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) and the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 8 of 1974) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

4. கவன ஈர்ப்பு

புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"புதுக்கோட்டை தேவஸ்தானம் ஊழியர்கள் தங்களுக்கு அரசு அறிவித்த ரூபாய் 10 ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கி இருப்பது குறித்து".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை தேவஸ்தானங்களின் ஆளுகையில் 117 கோயில்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 850 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 700 ஊழியர்கள் ஊழிய நிலங்களை அனுபவித்து வருவதோடு ரொக்கச் சம்பளமும் பெற்று வருகிறார்கள். திருக்கோகர்ணம் கோயிலில் மட்டும் 159 ஊழியர்கள்

உள்ளார்கள். இவர்களில் 140 நபர்கள் ஊழிய நிலங்களை அனுபவித்துக் கொண்டு ரொக்கச் சம்பளமும் பெற்று வருகிறார்கள். ஊழிய நிலங்களை அனுபவித்துக்கொண்டு பணியாற்றி வரும் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்க வேண்டிய அவசியமில்லையென அறங்காவலர்கள் தீர்மானித்துள்ளார்கள். மேற்படி தேவஸ்தானத்திற்கு அரசு மானியமாக வழங்கும் ரூ. 4,00,000 உள்பட வருடம் ஒன்றுக்கு வருமானம் சுமார் ரூ. 6,00,000 வருகிறது. இதில் சிப்பந்திகள் சம்பளம் மற்றும் அலவன்சுகளுக்கு வருடம் ரூ. 2,50,000 செலவாகிறது. தற்போதைய விலைவாசி உயர்வை உத்தேசித்தும் நியாயமான அளவில் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு கொடுக்கவும் அரசு மானியத்தை ரூ. 10 லட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டி அரசுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் பரிந்துரைத்துள்ளார். இப்பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது. ரொக்கச் சம்பளம் பெறும் தேவஸ்தான அலுவலக ஊழியர்களுக்கு மட்டும், தேவஸ்தான நிதி நிலைமையை அனுசரித்து ரூ. 5 சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதர ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க முடியாத வகையில் மேற்படி தேவஸ்தானத்தின் நிதி நிலைமை உள்ளது. அரசு அறிவிப்புப்படி ரூ. 10 சம்பள உயர்வு கொடுப்பதனால், 850 சிப்பந்திகளுக்கு ரூ. 1,02,000 கூடுதல் செலவு ஏற்படுமென்றும், தற்போது மேற்படி தேவஸ்தானத்திற்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 6 லட்சம் செலவு ஏற்படுகிறதென்றும், இதில் அரசு மானியம் ரூ. 4 லட்சம் போக எஞ்சிய தொகையை உண்டியல் மற்றும் இதர வருவாயிலிருந்து செலவு செய்யப்பட்டு வருகிறதென்றும், 1-5-1974 முதல் தான் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக திருக்கோகர்ண தேவஸ்தான ஊழியர்கள் அறிவித்துள்ளார்கள் என்றும் தற்பொழுது வேலை நிறுத்தம் எதுவும் நடைபெறவில்லை என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

[மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் தலைமை]

(பிற்பகல் 5-10)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஊழிய நிலங்களுக்கு, முன்னுள் இனம் சட்டத்தின்படி பல ஊழியர்களுக்கு பட்டா கொடுக்கப்படாமல், பிறருக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இப்போது நிலத்தை அனுபவிக்கவில்லை ; பலர் அனுபவிக்கவில்லை என்பதை அரசு அறியுமாவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, வேறு நபர்கள் நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருவதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாக அவற்றைப் பரிசீலிக்கலாம். சம்பள உயர்வைப் பொறுத்தவரையில், தற்போது நிதிநிலை இடம் தாவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 11]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : துணைத் தலைவரவர்களே, ஊழியர்களை அதிகமாக வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்க முடியாது ; வேறு வசதிகள் செய்து கொடுக்க முடியாதென்று சொன்னால், மாற்று வழி பற்றி ஆலோசிக்க வேண்டும். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே எண்ணிக்கை அதிகமென்று கருதினால், வேலைக் குறைப்பு செய்யலாமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவரவர்களே, வேலைக் குறைப்பு செய்தாலும், அதை வேண்டாமென்று சொல்பவர்கள் நம்முடைய அடிகளார் அவர்களிடத்தில் முறையிட்டால், அவர்களே இங்கே அதுபற்றி முறையிடுவார்கள். கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேலைக் குறைப்பு செய்ய வேண்டுமென்று யோசனை செய்த நேரத்தில், பொது மக்களின் பிரதிநிதிகள் வேண்டாமென்று சொன்ன காரணத்தால், மேற்கொண்டு புதிதாக ஊழியர்களை நியமிக்கக்கூடாதென்று முடிவெடுத்தோம். அந்த மாதிரி புதுக்கோட்டை திருகோகர்ணம் விஷயத்திலும் பின்பற்றலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசின் தீர்மானம்

அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மேலவை விதி 21 (3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21(3)-ன் படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற அரசின் தீர்மானம் மற்றொரு கூட்டத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.